// நினைவூட்டு – 1 //

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை –08.

ந.க.எண். 4834/ஆ2/2022, நாள். 23.08.2022

| | | |
|---|---|---|
| பொருள் | | கல்வி – இடைநிலைக் கல்வி – சென்னை மாவட்டம் – தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், **Inspire award Manak Programme** – 2022 2023 ஆண்டிற்கு புதிய பதிவுகள் மேற்கொள்வது – பதிவு மேற்கொண்ட விபரங்கள் அனுப்பக்கோருதல் – சார்பு. |
| பார்வை | 1 | சென்னை – 25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரின் கடிதம் எண். 3335/P1/2022,நாள். 30.06.2022 மற்றும் 22.08.2022 |
| | 2 | இவ்வலுவலக இதே எண்ணிட்ட 10.07.2022 நாளிட்ட கடிதம். |

**********

மேற்காண் பொருள் சார்ந்து பார்வை 1– ல் காணும் கடிதத்தில், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், இந்திய அரசின் கீழ் இயங்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, தேசிய புத்தாக்க நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான Inspire Award விருது வழங்கப்பட்டு வருகிறது. 2022–2023 ஆம் ஆண்டிற்கான சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 6 முதல் 10 முடிய பயிலும் மாணவர்களுக்கான புதிய பதிவுகள் www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் **ஜீலை – 1 ஆம்** தேதியிலிருந்து செப்டம்பர்- **30 ஆம் தேதி வரை** மட்டுமே **செயல்படும்** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பிற்கு ஒருவர் என 5 பேர்களையும், நடுநிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பிற்கு ஒருவர் என 3 பேரையும் பதிவு செய்யலாம். கூடுதலாக பதிவு செய்தால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

கடவுச்சொல்லை மறந்துவிட்ட பள்ளிகள் forgot password என்ற பட்டனை அழுத்தி அதந் மூலம் தங்கள் கடவுச் சொல்லை புதுப்பித்துக்கொள்ளலாம். **User ID** மறந்துவிட்டால் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களிடம் விண்ணப்பித்து மாற்றிக்கொள்ள வேண்டும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் மூலமாக இதை மாற்ற இயலாது.

வங்கிக் கணக்கு எண்களை பதிவு செய்யும்போது வங்கிக் கணக்கு மாணவரின் பெயரில் தனியான கணக்காக இருக்க வேண்டும். வங்கிக்கணக்கு தொடர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும். கணக்கு எண், வங்கியின் பெயர், **IFSC Code No**. முதலியவற்றைப் பிழையின்றிக் குறிப்பிட வேண்டும். இவற்றைப் பதிவு செய்யும்போது மிகுந்த கவனம் தேவை பதிவு செய்ததிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் ஒவ்வொருவருக்கும் **ரூ.10, 000/–** அவரவர் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும்.

மின்னஞ்சல், தொலைபேசி எண் முதலியவற்றைக் குறிப்பிடும்போது பள்ளியின் மின்னஞ்சல், பள்ளித் தலைமை ஆசிரியரின் அலைபேசி அல்லது பள்ளியின் தொலைபேசி முதலியவற்றைக் குறிப்பது நல்லது. புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகள் பற்றிய தகவல் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் என்பதால் அதில் கவனம் தேவை. பள்ளித் தலைமை ஆசிரியர் ஓய்வு பெறும்போது அலைபேசி எண்கள் மாற்றத்தை தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திற்கு தெரிவிக்கவேண்டியது மிக அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் சார்ந்து அனைத்துப் பள்ளி மாணவர்களின் விவரங்களையும் பதிவு செய்திட பார்வை 2– ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1 மாதம் கடந்த நிலையில் இதுவரை எந்தப் பள்ளிகளிலிருந்தும் இன்னும் பதிவு செய்யப்படாமல் உள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கதும், இப்பணியின் முக்கியத் துவத்தினை அசட்டை செய்வதுபோல் உள்ளது. இது ஏற்க இயலாத ஒன்றாகும்.

எனவே, இனியும் தாமதம் செய்யாமல் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற இரு தினங்களுக்குள் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர் / மேல்நிலை / நடுநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மேற்காண் அறிவுரைகளைப் பின்பற்றி மேற்காண் இணையதளத்தில் சென்று மாணவர்களின் விவரங்களை பதிவு செய்துவிட்டு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர், வகுப்பு மற்றும் எத்தனை மாணவர்களுக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை கீழ்க்காண் படிவத்தில் பூர்த்தி செய்து முதன்மைக் கல்வி அலுவலக மின்னஞ்சல் (ceochn@nic.in) முகவரிக்கு அனுப்பிவைத்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | பள்ளியின் பெயர் : | |
|---|---|---|
| வ. எண் | மாணவன் / மாணவி பெயர் | வகுப்பு |
| | | |
| | | |

ஒப்பம் XXXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்து அரசு/உதவி பெறும்/சென்னை/தனியார் நடுநிலை/உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. சென்னை – 25, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை– 06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம், தக்க தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.